நம் பள்ளி நம் பெருமை




நம் பள்ளி..! நம் பெருமை..!!

# பள்ளிக் கல்வித் துறை

## ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி



# பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர் கையேடு

## 2022 - 2023

நலத்திட்டங்களின் விநியோகம் மற்றும் தரம், இடை நின்ற குழந்தைகளின் விவரங்கள்)

(iv) மாதாந்திர பள்ளி மேம்பாட்டுத் திட்டம் – திட்டமிடல், செயல்படுத்துதல், மற்றும் மதிப்பாய்வு

(v) தீர்மானங்கள் பதிவேடு – தேதி வாரியாக அல்லது திட்டத்தின் நிலை வாரியாக காண இயலும்

(vi) வளங்கள் – காணொளிகள், நலத்திட்டங்கள் மற்றும் உதவி தொகைகளின் விவரங்கள் போன்றவை



# பள்ளிக் கல்வித் துறை

## ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி

# பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர் கையேடு

## 2022 - 2023

(iii) ஆசிரியர்களின் பாதுகாப்பு, ஆண், பெண் ஆசிரியர்களுக்கு தனித்தனியாக வசதியான ஆசிரியர் அறை, குடிநீர், கழிவறை போன்றவை இருப்பதை உறுதிசெய்தல்.

(iv) ஆண்டு தோறும் பள்ளி மேம்பாட்டுத் திட்டம் தயாரித்தல்.

(v) பள்ளித் தலைமையாசிரியர், பள்ளி மேலாண்மைக்குழு, வட்டார வளர்ச்சி அலுவலர், நாடாளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர் மற்றும் பிற தொண்டு நிறுவனங்கள் இணைந்து செயல்பட்டு பள்ளியின் உள்கட்டமைப்பை மேற்கொள்ளவும் பராமரித்திடவும் உறுதுணை புரிதல்வேண்டும்.

**தொடர்புடையதுறை :** பொதுப்பணித்துறை – உள்கட்டமைப்பு, பராமரிப்பு

**பள்ளி சுகாதாரம்:**

(i) பள்ளியில் சுகாதாரமான உணவு வழங்குவதை உறுதிசெய்தல்

(ii) பள்ளியில் சுகாதாரமான குடிநீர் வழங்குவதை உறுதிசெய்தல்

(iii) பள்ளிகளில் சுகாதாரமான கழிப்பறைகள் இருப்பதை உறுதிசெய்தல்

**கீழ்காணும் பணிகளை மேற்பார்வை செய்தல்.**

(i) கழிப்பறை, சிறுநீர் கழிப்பிடங்களை நாள்தோறும் கழுவிபினாயில் கொண்டு சுத்தம் செய்தல்

(ii) கழிப்பறைக்குத் தண்ணீர் வசதி செய்தல்.

(iii) மாணவர் கைகழுவத் தேவையான தண்ணீர், சோப்பு மற்றும் டவல் (துவாலை) வழங்குதல்.

(iv) நாப்கின் எரியூட்டியைப் பயன்படுத்துதல்.

(v) உறிஞ்சுக் குழியை (Septic tank) அவ்வப் போது சுத்தம் செய்து பராமரித்தல்.

(vi) சுகாதாரமான கழிப்பறையைப் பராமரிக்க தேவைப்படும் பொருள்கள் (Sanitary Materials) பயன்படுத்துதல்.

(vii) மேல்நிலைத் தொட்டிகளை அவ்வப் போது சுத்தம் செய்தலை உறுதிபடுத்துதல்.



# பொருளடக்கம்

## பள்ளி மேலாண்மைக் குழு


1. பள்ளி மேலாண்மைக்குழு என்றால் என்ன?
2. பள்ளி மேலாண்மைக்குழுவின் பங்கும் பொறுப்பும்
3. பள்ளி மேம்பாட்டுத் திட்டம்
4. பள்ளி மற்றும் குழந்தைகள் மேம்பாட்டில் பங்களிக்கும் துறைகள்


### பள்ளி மேலாண்மைக் குழு என்றால் என்ன?

- பள்ளியின் முன்னேற்றத்திற்காகவும், பள்ளிச் செயல்பாடுகளை மேலாண்மை செய்வதற்காகவும், இலவச கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009–ன் படி ஏற்படுத்தப்பட்ட குழுவே பள்ளி மேலாண்மைக் குழுவாகும்.
- பள்ளியில் படிக்கும் குழந்தைகளின் பெற்றோர்கள், தலைமையாசிரியர், ஆசிரியர் உள்ளாட்சி பிரதிநிதிகள் கல்வியாளர்கள் மற்றும் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் ஆகியோர் மேலாண்மைக் குழுவில் உறுப்பினர்கள் இருப்பார்கள்.
- இக்குழு இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மாற்றியமைக்கபடும். 20 உறுப்பினர்கள் கொண்ட இந்த பள்ளி மேலாண்மைக்குழு பள்ளியின் தேவைகளை அறிந்து திட்டமிட்டு சமூதாயத்தின் பங்களிப்போடு அவற்றை நிறைவேற்றி குழந்தைகளுக்குத் தரமான கல்வி அளிப்பதை உறுதி செய்வாரார்கள்.
- இக்குழுவின் உறுப்பினர்கள் பள்ளியின் தேவைகளை அறிந்து திட்டமிட்டு சமூதாயத்தின் பங்களிப்போடு அவற்றை நிறைவேற்றி குழந்தைகளுக்குத் தரமான கல்வி அளிப்பதை உறுதி செய்வர்

(ii) இல்லம் தேடிக்கல்வி மையம் சிறந்த முறையில் செயல்படுவதற்கு பள்ளி மேலாண்மைக்குழுக்கள் உறுதுணையாக இருத்தல் வேண்டும்.

(iii) குழந்தைகளுடன் தன்னார்வலர்களுக்கானப் பிணைப்பை வலுப்படுத்துவதற்குரிய செயல்பாடுகளைப் பள்ளி மேலாண்மைக்குழுக்கள் எடுக்கவேண்டும். அதேபோல் ஆசிரியர்களுக்கும், தன்னார்வலர்களுக்கும் இடையிலானப் பிணைப்பை வலுத்தப்படுத்த வேண்டும்.

(iv) பள்ளி மேலாண்மைக்குழு கூட்டம் நடைபெறும் நாள் அன்று இல்லம் தேடிக்கல்வித் திட்டத் தன்னார்வலர்களைச் சிறப்பு அழைப்பாளராக அழைத்துச் சார்ந்த மையத்தில் உள்ள மாணவர்களின் கற்றல் அடைவு குறித்துக் கலந்தாலோசிக்க வேண்டும்.

## 9. நிதி தொடர்பான மேலாண்மை வழிகாட்டுதல்கள்



(i) பள்ளியில் ஆண்டு வரவு செலவு, பற்றுச் சீட்டுகள் என பள்ளி மேம்பாட்டுத் திட்டச் செயலியில் பதிவேற்றம் செய்யப்பட்டு வெளிப்படைத் தன்மையுடன் வைத்திருக்க வேண்டும்.

(ii) ஒவ்வொரு ஆண்டு முடிவிலும், நிதிநிலை அறிக்கை மற்றும் அது தொடர்பான பூர்த்தி செய்யப்பட்டப் பதிவேடுகள், பள்ளி மேலாண்மைக்குழுவின் தலைவர் அல்லது துணைத்தலைவர் மற்றும் தலைமையாசிரியர் ஆகியோரால் செயலிவழியே ஒப்புதல் அளிக்கப்பட வேண்டும்.

(iii) பள்ளிகளில் தலைமையாசிரியர்கள் மூலம் மேற்கொள்ளப்படும் வரவு–செலவிற்குப் பள்ளி மேலாண்மைக்குழுக் கூட்டத்தில் தவறாமல் ஒப்புதல் பெறவேண்டும்.

(iv) அரசின், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பிற ஆதாரங்கள் வாயிலாக வழங்கப்பட்ட நிதியைக் கண்காணித்து மற்றும் பயன்படுத்த வேண்டும்.
செலவினங்களுக்கான இரசீதுகள் முறையாகப் பராமரிக்கப்பட்டுக் கூட்டத்தின் போது உறுப்பினர்களின் பார்வைக்கு வைக்கவேண்டும்.



வயதிற்கேற்ற வகுப்புகளில் சேர்த்து அவர்கள் தொடர்ந்து பள்ளிக்கு வருவதை உறுதி செய்தல்.

2. பள்ளியை சுற்றியுள்ள பகுதிகளிலுள்ள மாற்றுத்திறனுடைய மற்றும் சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகளைக் கண்டறிந்து அவர்களுக்குத் தேவையான வசதிகள் பள்ளிகளில் இருப்பதை உறுதி செய்தல்.
3. 6 முதல் 14 வயதிற்குட்பட்ட எந்த ஒரு குழந்தையும் பள்ளியில் சேராமல் இருத்தல் கூடாது.
4. தலைமை ஆசிரியர், ஆசிரியர்களுக்கு உறுதுணையாக இருந்து சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகள் முறையான பள்ளிகளில் சேர்ப்பதை உறுதி செய்ய வேண்டும்.
5. பள்ளியின் செயல்பாடுகளைக் கண்காணித்தல் மற்றும் மாணவர்களுடைய கற்றல் திறன்களைக் கவனித்து அதற்கேற்றக் கற்றல் சூழல்கள் பள்ளியில் இருப்பதை உறுதி செய்தல் வேண்டும்.
6. பள்ளியில் உள்ள மதிய உணவுத் திட்டம் முறையாகச் செயல்படுவதைக் கண்காணித்து, சுவையான மற்றும் சத்தான உணவுகள் குழந்தைகளுக்குக் கிடைப்பதற்கு உறுதுணையாகக் இருக்க வேண்டும்.
7. அரசு, உள்ளாட்சி அமைப்பு மற்றும் வேறு மூலங்களில் இருந்து கிடைக்கும் நிதி ஒதுக்கீடுகள் முறையாகப் பயன்படுத்தபடுவதற்கு உறுதுணையாக இருத்தல் வேண்டும்.
8. கிராம சபைக் கூட்டம் நடைபெறும் நேரங்களில் பள்ளி மேலாண்மைக்குழு உறுப்பினர்கள் கலந்துக் கொண்டு, பள்ளி மேம்பாட்டுக் திட்டம் மற்றும் கல்வி சார்ந்த தீர்மானங்கள் நிறை வேறுவதை உறுதி செய்ய வேண்டும்.
9. பள்ளியின் அனைத்து அம்சங்களிலும் தன்னிறைவு பெற்ற பள்ளியாக உருவெடுப்பதற்கு, பள்ளியின் தேவைகள் அனைத்தையும் கருத்தில் கொண்டு பள்ளி மேம்பாட்டுத் திட்டதை உருவாக்குதல் வேண்டும்.
10. பள்ளி மேலாண்மைக்குழு, வட்டார வளர்ச்சி அலுவலர், பாராளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர் மற்றும் பிற தொண்டு நிறுவனங்கள் இணைந்து செயல்பட்டு பள்ளியின்

ஆபாச படங்கள் எடுப்பது, விற்பது, தயாரிப்பது மற்றவருக்கு கொடுப்பது, இணையதளம், கணினி என எந்த தொழில் நுட்பரீதியில் இருந்தாலும் குற்றமே. போக்ஸோ சட்டமானது இக்குற்றங்களுக்கு 7 முதல் 10 ஆண்டுகள் சிறைத்தண்டனையும், அபராதமும், அதிகபட்சமாக ஆயுள் தண்டனையும் வழங்க வழிவகை செய்கிறது.

## 6. குழந்தை உரிமைகளை உறுதிசெய்வதில் பள்ளி மேலாண்மைக் குழுவின் பங்கு:



(i) குழந்தைகளுக்கான உரிமைகள் நான்கு முக்கிய உரிமைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன அவை உயிர் வாழ்வதற்கான உரிமை, பாதுகாப்பிற்கான உரிமை, முன்னேற்றத்திற்கான உரிமை, பங்கேற்பிற்கான உரிமை ஆகியவைகள் முழுமையாக ஒவ்வொரு குழந்தைக்கும் உறுதிசெய்யப்படப் பள்ளி மேலாண்மைக்குழு உறுதியேற்கவேண்டும்.

(ii) பள்ளியில் ஆண் மற்றும் பெண் குழந்தைகள் எவ்வித வேறுபாடும் பாகுபாடுமின்றி அனைத்து நிலைகளிலும் சமமான வாய்ப்புகள் கிடைப்பதைப் பள்ளி மேலாண்மைக்குழு உறுதி செய்ய வேண்டும்.

(iii) குழந்தை உரிமைகள் பற்றிய விழிப்புணர்வுகள் குறித்தப் பயிற்சி பள்ளி மேலாண்மைக்குழு உறுப்பினர்களுக்கு வழங்கப்படும்.

(iv) குழந்தை உரிமைகள் பற்றிய விழிப்புணர்வை அனைத்துப் பெற்றோர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் ஏற்படுத்துதல்.

(v) குழந்தைகளைப் பாதுகாப்பதற்குரிய அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு அதனைக் கண்காணித்தல் மற்றும் உறுதிசெய்தல் வேண்டும்.

(vi) குழந்தைகளுக்கு உடல் மற்றும் மன அளவிலானத் துன்புறுத்தல்கள் ஏதும் நடைபெறாதவாறு பெற்றோரின் கண்காணிப்பு இருத்தலை உறுதிசெய்தல் வேண்டும்.

(vii) சுகாதாரமான உணவு, சுகாதாரமான குடிநீர், சுகாதாரமானக் கழிப்பறை, சுகாதாரமானச் சுற்றுச் சூழல் போன்றவைகள் எல்லா மாணவர்களுக்கும் பள்ளியில் கிடைப்பதற்கும் அதனை முறையாகப்



ஏற்ற வகுப்புகளில் சேர்த்து அவர்கள் தொடர்ந்து பள்ளிக்கு வருவதை உறுதி செய்யவேண்டும். இதுவே இக்குழுவின் முதன்மையான பணியாகும்.

(iii) ஊராட்சித் தலைவர் தலைமையில் நடக்கும் கூட்டங்களில் பள்ளிச் செல்லாக் குழந்தைகள் குறித்து விவாதித்து ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்டத்தில் அக்குழந்தைகளைக் கண்டறிய நடத்தப்படும் கணக்கெடுப்பு, கண்டறியப்பட்ட குழந்தைகள் பயில்வதற்கு சிறப்புப் பயிற்சி மையங்கள் மற்றும் சலுகைகள் சார்ந்து மக்களுக்கு எடுத்துக்கூறுதல் வேண்டும். மேலும் பள்ளி செல்லா / இடைநின்ற குழந்தைகளை எவரேனும் கண்டறிந்தால் அவர்களை முறையான பள்ளியில் சேர்க்க உரிய ஒத்துழைப்பு வழங்குமாறும் கேட்டுக்கொள்ள வேண்டும்.

(iv) பள்ளி செல்லா/ இடைநின்ற குழந்தைகள் கணக்கெடுப்பு விவரத்தினை குடியிருப்பு வாரியாகத் தொகுத்து அவர்களைப் பள்ளிகளில் சேர்க்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை ஒவ்வொரு மாத பள்ளி மேலாண்மைக்குழு கூட்டத்திலும் தீர்மானமாக போடவேண்டும்.

(v) புலம்பெயர்ந்த குழந்தைகள் கண்டறியப்பட்ட உடன் உடனடியாக அருகாமையிலுள்ள பள்ளிகளில் சேர்க்கப்பட வேண்டும். ஒன்றிய மேற்பார்வையாளர் / SMC உறுப்பினர் / வட்டாரக் கல்வி அலுவலர், பள்ளித் தலைமையாசிரியர் ஆகியோர் அக்குழந்தைகளுக்கு அரசு வழங்கும் அனைத்து சலுகைகளும் கிடைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

(vi) கணக்கெடுப்பு விவரங்களை SMC கூட்டத்தில் தீர்மானமாகச் சேர்த்தல் வேண்டும். ஒவ்வொரு மாதமும் கூட்டப்பொருளில் பள்ளிசெல்லா / இடைநின்ற / புலம் பெயர்ந்த குழந்தைகள் விவரம் சேர்க்கப்பட வேண்டும்.

(vii) மாணவர்களின் கற்றல் கற்பித்தல் செயல்பாடுகளில் சம்பந்தப்பட்ட பள்ளியின் தலைமையாசிரியர் மற்றும் ஆசிரியர்கள், அப்பகுதி பொறுப்பு ஆசிரியர் பயிற்றுநர் உறுதுணையாக இருந்து சிறப்புப் பயிற்சி மைய குழந்தைகள் அனைவரையும் முறையான பள்ளிகளில் மீண்டும் சேர்க்க விரைவில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். கிராமசபைக் கூட்டம் நடைபெறும் நேரங்களில் பள்ளி மேலாண்மைக்குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டு, பள்ளி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் கல்வி சார்ந்த தீர்மானங்கள் நிறைவேற்றப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

நாற்காலி, காதுகேட்கும் கருவி, கண்கண்ணாடி உள்ளிட்ட பல உதவி உபகரணங்கள் வழங்க வேண்டும்.

(vii) பள்ளிக்கு வந்து செல்ல போக்குவரத்து பயணப்படியும் அவர்களது பாதுகாவலருக்கு பாதுகாவலர் பயணப்படியும் வழங்கவேண்டும்.

(viii) சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளின் தேவைகளைக் கருணை அடிப்படையில் பார்க்கக்கூடாது; அவர்களின் உரிமைகளின் அடிப்படையில் பார்க்கவேண்டும்.

## 3. மாணவர் பாதுகாப்பு: 

**புகையிலை மற்றும் போதைப் பொருட்கள் தடுப்பு:**

மாணவர்கள் நலன் கருதிப் பள்ளிவளாகத்திற்கு அருகில் புகையிலை உள்ளிட்டப் போதைப்பொருட்கள் விற்பனை செய்வதை உறுப்பினர்கள் கண்காணித்துக் காவல்துறை உதவியுடன் தடைசெய்தல் வேண்டும்.

போதைப் பொருள் தடுப்புச் சார்ந்து பெற்றோர்கள் மற்றும் மாணவர்களுக்கு விழிப்புணர்வு மற்றும் ஆலோசனை வழங்குதல் வேண்டும். பள்ளி வளாகத்திற்குள் மாணவர்கள் பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டும். பள்ளிகளில் முதலுதவிப் பெட்டி மற்றும் மாணவர் மனசு ஆலோசனைப் பெட்டி இருப்பதை உறுதிசெய்தல் வேண்டும்.

**தொடர்புடைய துறை :** தமிழ்நாடு காவல்துறை

## 4. பெண்கள் மற்றும் பெண் குழந்தைகளுக்கான பாதுகாப்பு



பெண்களுக்கான சமத்துவ உரிமையை இந்தியநாட்டின் அரசியல் சட்டம் 1951 பகுதி இரண்டு உறுதிசெய்துள்ளது. அதில் வரதட்சணை ஒழிப்புச்சட்டம், பாலியல் தொழில் ஒழிப்புச் சட்டம் போன்றவை முக்கியமானவையாகும்.

(i) நல்ல மற்றும் கெட்டதொடுதல் (Good Touch and Bad Touch) பற்றிய அறிவை ஆண் குழந்தைகளுக்கும் பெண் குழந்தைகளுக்கும் ஏற்படுத்துதல்.

(ii) புதிய நபர்களிடம் பழகும் முறையையும் அவர்களின் நடத்தை நோக்கத்தையும் புரிந்து கொள்ளும் திறனை பெண் குழந்தைகளிடம் வளர்த்தல்.



(v) கல்வியறிவு, எண்ணறிவு மற்றும் வாழ்வியல் திறன்கள் போன்ற தர நிர்ணயக் கூறுகளைக் கற்றல் விளைவுகளின் மூலம் அனைவரையும் அடையச் செய்தல் வேண்டும்.

(vi) உள்ளூர் வளங்கள் மற்றும் தேவையான கற்றல் செயல்பாடுகளைப் பயன்படுத்தி ஆசிரியர், கற்போர் அனைவரின் கற்றல் தேவைக் கேற்ப
உள்ளடங்கிய வகுப்பறையில் பல்வேறு வகையான கற்றல் சூழ்நிலைகள்/
வாய்ப்புகளை உருவாக்க வேண்டும்.

(vii) பெற்றோர்கள், பள்ளிமேலாண்மைக்குழு உறுப்பினர்கள், சமுதாயம் மற்றும் கல்வி அலுவலர்கள் ஆகிய அனைவருக்கும் கல்வியின் தரத்தினை உறுதிசெய்யும் பொறுப்பு உள்ளது.

(viii) ஒவ்வொரு வகுப்பிற்குமான மொழிப்பாடங்கள் (தமிழ், ஆங்கிலம்) கணக்கு, சூழ்நிலையியல், அறிவியல் மற்றும் சமூக அறிவியல் ஆகிய பாடங்களில் கற்றல் விளைவுகள் கொடுக்கப்பட்டுள்ளன. இதனை பெற்றோர் / பாதுகாவலர்கள், ஆசிரியர்கள், பள்ளி மேலாண்மைக்குழு மற்றும் சமுதாய உறுப்பினர்கள் போன்ற அனைவரும் அறிந்து கொள்வது அவசியம்.

(ix) ஒவ்வொரு பாடப்பொருளும் மாணவர்களுக்கு கற்பிக்கப்படும் பொழுது அப்பாடத்திறன்கள் அவர்களை சென்றடையும் விதத்தில் செயல்பாடுகளையும், வாய்ப்புகளையும், உருவாக்குதல் வேண்டும். ஒவ்வொரு வகுப்பு முடிவடைந்த பின்னர், எதிர்பார்த்த கற்றல் விளைவுகள் அனைத்து மாணவர்களுக்கும் சென்றடைந்துள்ளதா என்பதை ஆசிரியர்களுடன் இணைந்து உறுதிசெய்வது இத்துணைக்குழு கடமையாகும்.

(x) மாணவர்களின் பலவிதமான திறன்களை வளர்க்கும் செயல்பாடுகள் நடைபெறுவதையும், செய்து கற்றல் முறையில் மாணவர்களுக்கு கற்றல் நிகழ்வதையும் உறுதிசெய்தல் வேண்டும்.

(xi) கற்றல் வளங்கள் / பொருட்கள் வகுப்பறையில் இருப்பதையும் மாணவர்களின் படைப்பாற்றல் களஞ்சியம் இருப்பதையும் உறுதிசெய்தல் வேண்டும்.

(xii) ஆசிரியர்களுக்கு கற்பித்தலில் புதுமைகளை பகிர்ந்துக் கொள்ள வாய்ப்புகள் வழங்கப்படுவதையும், ஆசிரியர்களின் சிறப்பு செயல்திறன்கள் / சாதனைகள் பள்ளியில் பாராட்டப்படுவதையும் தலைமையாசிரியருடன் இணைந்து குழு உறுதிசெய்தல் வேண்டும்.